# பெரம்பலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை வழங்கும் திட்டத்தில் விண்ணப்பம் பெறுதல் மாற்றுத்திறனாளிகள் பயன் பெற மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவிப்பு

## தேசிய தகவல் மைய செய்தி

பெரம்பலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை பெறாதவர்களுக்கு அதை வழங்குவதற்கான சிறப்பு பணிகள் பெரம்பலூர் நகராட்சி அலுவலகம், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம், தொடர்புடைய பேரூராட்சி அலுவலகங்கள் மற்றும் ஊராடசி அலுவலங்களில் நடைபெற உள்ளது. சிறப்பு முகாம்யின் போது மாற்றுத்திறனாளி நபர்கள் அவர்களுக்குறிய தேசிய அடையாள அட்டை,குடும்ப அட்டை,ஆதார் அட்டை (அசல் மற்றும் நகல்) பாஸ்போர்ட் சைஸ் பேட்டோ ஒன்று எடுத்து வரவேண்டும். 20.01.2020 ம் தேதியில் அரும்பாவூர்,பூலாம்பாடி மற்றும் குரும்பலூர் பேரூராட்சி அலுவலகங்கள், 21.01.2020 –ம் தேதியில் லட்பைக்குடிகாடு பேரூராட்சி அலுவலகம், 22.01.2020 முதல் 29.01.2020 வரை பெரம்பலூர் நகராட்சி அலுவலகம் மற்றும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகத்தில் விண்ணபபங்கள் பெற்று பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் அளிக்கவேண்டும். மேலும் பெரம்பலூர் மாவட்டத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களில் வசிக்கும் மாற்றுத் திறனாளி நபர்களுக்கு அந்த பகுதியில் உள்ள ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பணியாற்றும் ஊராட்சி மன்ற தலைவர்/பஞ்சாய்த்து செயலாளரிடம் 21.01.2020 முதல் 29.01.2020க்குள் விண்ணப்பங்கள் பெற்று பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் அந்த பகுதி ஊராட்சி அலுவலகத்தில் அளிக்கவேண்டும். இது நாள் வரை தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை பெறாமல் விடுபட்டுள்ள மாற்றுத்திறனாளி நபர்கள் இச்சிறப்பு பணியில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா.இ.ஆ.ப,அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
பெரம்பலூர்